தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, நவம்பர் 12, புதன்கிழமை.

ஐப்பசி 27, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு. ''

நேற்று இருந்தவன் ஒருவன், இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் தற்காலிக ஆளுநர் ஆகியோர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. க. முருகேசன் 2-5-1986 ஆம் தேதியன்றும், திரு. ஏ. ராகவ ரெட்டி 20-5-1986 ஆம் தேதியன்றும், திரு. கே. என். சாமிநாதன் 24-5-1986 ஆம் தேதியன்றும், திரு. சி. வே. வேலப்பன் 26-6-1986 ஆம் தேதியன்றும், திரு. பெ. பெரியசாமி 29-7-1986 ஆம் தேதியன்றும், திரு. சி. முத்தையா 1-8-1986 ஆம் தேதியன்றும், திரு. ஆர். நடேசன் 25-8-1986 ஆம் தேதியன்றும், திரு. எம். கே. கெம்பை கவுண்டர் 3-9-1986 ஆம் தேதியன்றும், திரு. கு. அ. பொம்மன் 30-9-1986 ஆம் தேதியன்றும் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியும், தமிழ்நாட்டின் முன்னாள் தற்காலிக ஆளுநருமான திரு. பி. கோவிந்தன் நாயர் அவர்கள் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கில் 26-5-1986 ஆம் தேதியன்றும், மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. முருகேசன் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை, தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். 1961 ஆம் ஆண்டிலிருந்து 1965 ஆம் ஆண்டு வரை பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

திரு. ஏ. ராகவ ரெட்டி அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு மாவட்டம் கும்மிடி பூண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. என். சாமிநாதன் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை பெரியார் மாவட்டம் வெள்ளக் கோவில் தொகுதியிலிருந்து (அன்றைய கோயம்புத்தூர் மாவட்டம்) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. வே. வேலப்பன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையிலும், 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும், 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையிலும் நான்கு முறை சேலம் மாவட்டம் கபில மலைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். ஏழாவது சட்டமன்றப் பேரவையின் தற்காலிக பேரவைத் தலைவராகவும் (Pr tem Sp ak r) பணிபுரிந்துள்ளார்.

திரு. பெ. பெரியசாமி அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் ராசிபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. முத்தையா அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையிலும் தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

திரு. ஆர். நடேசன் அவர்கள் 1949 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்கு புதுக்கோட்டை தொகுதியிலிருந்து நியமனம் செய்யப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். கே. கெம்பை கவுண்டர் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

1986 நவம்பர் 12] *(பேரவைத் தலைவர்)*

திரு. கு. அ. பொம்மன் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை நீலகிரி மாவட்டம் நீலகிரி (ஒதுக்கப் பட்ட) தொகுதியிலிருந்தும், 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரை நீலகிரி மாவட்டம் கூடலூர் (ரிசர்வ்) தொகுதியி லிருந்தும் இரு முறை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியும், தமிழ்நாட்டின் முன்னாள் தற்காலிக ஆளுநருமான திரு. பி. கோவிந்தன் நாயர் அவர்கள் 9–4–1977 ஆம் தேதி முதல் 26–4–1977 ஆம் தேதி வரை தமிழ்நாட்டின் தற்காலிக ஆளுநராக பணிபுரிந்துள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள் கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகை யில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

2. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் துணைப் பிரதமர் திரு. ஜெகஜீவன்ராம் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெகஜீவன் ராம், இந்தியாவின் முன்னாள் துணைப் பிரதமர் அவர்கள் மறைந்ததை இந்தப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர் மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பாபுஜி என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப் பட்டவரும், இந்திய சுதந்திரப் போரில் பங்கு கொண்ட மூத்த முதுபெரும் தலைவர்களில் ஒருவரும், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவரும், இந்திய மத்திய